**செய்தி வெளியீடு எண் : 154** **நாள்: 21.01.2022**

சென்னை எழும்பூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் (இ.எஸ்.ஐ) மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வெ.கணேசன் அவர்கள் இன்று (21.01.2022) திடீர் ஆய்வு மேற்கொண்டார்

சென்னை எழும்பூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் (இ.எஸ்.ஐ) மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வெ.கணேசன் அவர்கள் இன்று (21.01.2022) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் உள்ள குறை நிறைகளை கேட்டறிந்தார், மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்களின் வருகை பதிவேடுகளை பார்வையிட்டு,அங்கு உள்ள சேமிப்பு கிடங்கிற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்,பின்பு மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களிடம் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் அவர்களுக்கு தேவையான மருந்துகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என அவர் ஆணையிட்டார், பின்பு காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும் என அமைச்சர் தெரிவித்தார், அப்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இயக்குனர் ராஜமூர்த்தி உடன் இருந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**